
பரிசுத்த பவுல் தமிழ் திருச்சபை
அஹமதி - குவைத்
என் கிருபை உனக்குப் போதும்
2 கொரிந்தியர்:12:9
செய்தி மலர்
ஆகஸ்ட் மாதம் 2025
இதழ் : 03
மலர் : 24

# முதன்மை ஊழியரிடமிருந்து...

தேவனுக்கு பிரியமான சபையினருக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஆசீரும் வாழ்த்துகளும் பூரணமாய் உண்டாவதாக. கிருபையாய் நம்மையும் நம் குடும்பத்தையும் நம் சபையையும் பாதுகாத்து நடத்தும் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துவோம். கர்த்தரின் பெரிதான கிருபையினால் **2025 -ஆம்** ஆண்டின் **ஆகஸ்ட் மாதத்தில்** பிரவேசிக்க செய்த தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துவோம். விடுமுறைக்கு செல்கின்ற மற்றும் விடுமுறையை முடித்து வருகின்ற யாவருக்கும் கர்த்தர் போதுமானவராய் இருப்பாராக. கர்த்தரின் காக்கும் கரம் நம் எல்லோருடைய கரங்களையும் பற்றி நடத்துவாராக.

சிரிப்பது உடலுக்கும் உள்ளத்திற்கும் ஆரோக்கியத்தை உண்டுபண்ணுவதாக நாம் அறிந்திருந்தாலும்: வாழ்க்கையின் அனுபவங்களை நோக்கும் பொழுது சிரிப்பதற்கும் மகிழ்வை அனுபவிப்பதற்கும் அநேக வேளைகளில் நாம் யோசிக்கிறோம். பல வேளைகளில் அவைகளை அடக்கிக் கொள்ளுகிறோம்: நமக்குள் நாமே மறைத்துக் கொள்ளுகிறோம்: இயன்றமட்டும் மௌனத்தில் காலங்களை கடத்தி நடத்தி செல்லுகிறோம். காரணங்கள் பல இருந்தாலும் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு கர்த்தர் சொல்லுகிறார், **“இனி அவர் (கர்த்தர்) உம்முடைய வாயை நகைப்பினாலும், உம்முடைய உதடுகளைக் கெம்பீரத்தினாலும் நிரப்புவார்” (யோபு. 8:21)** என்று.

சாராவினுடைய வாழ்க்கை மிகவும் கசந்ததாகவும், நகைப்பை மறந்தவளாகவும், வாழ்க்கையை வெறுத்து வாழ்ந்ததாகவும் வேதம் நமக்கு விளங்கப்பண்ணினாலும்; சாராள் சாட்சியாக குறிப்பிடுகிறதும்: நமக்கு எடுத்துச் சொல்லுகிற செய்தியும் என்னவென்றால், **“தேவன் என்னை நகைக்கப்பண்ணினார்: இதைக் கேட்கிற யாவரும் என்னோடேகூட நகைப்பார்கள்”** (ஆதி. 21:6) என்று.

சாராவினுடைய அனுபவம் கர்த்தருடைய பிள்ளைகளாகிய யாருடைய வாழ்க்கையில் காணப்பட்டாலும் கர்த்தரை நம்பிக்கையாய் கொண்டிருக்கிற கர்த்தருடைய பிள்ளைகளையும் கர்த்தர் சாராளைப்போல நகைக்கப்பண்ணுவார். இதை இந்த மாதத்திலும் குறிப்பிட எனக்கு மீண்டும் உணர்வு உண்டானதினிமித்தம் இதை திரும்பவும் எழுதி நினைவு படுத்தியுள்ளேன்.

பரிசுத்த பவுல் வாழ்க்கையில் கசப்புடனும் சோர்வுடனும் இருக்கிறவர்களுக்கு சொல்லுகிற தேவ ஆலோசனை என்ன தெரியுமா! **“நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள்: உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள்: ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள்”** (ரோமா;12:12) என்று மட்டுமே. ஆகவே தேவனுக்கு பிரியமான தேவ பிள்ளைகளே! கர்த்தர்மேல் நாம் வைத்திருக்கிற நம்முடைய நம்பிக்கையில் ஒரு நிச்சயம் நமக்கு உண்டாகும் போது நமக்கு அது சந்தோஷத்தை உண்டாக்கும். உபத்திரவங்கள் நேரிடும் போது முறுமுறுப்பின்றி பொறுமையாய் கர்த்தரில் விசுவாசத்தைக் காத்துக் கொண்டு தேவனுடைய பொற்பாதத்தில் ஜெபத்தோடு காத்திருக்கப் பழகிக் கொள்ளுகின்றபோது நம்முடைய வாழ்க்கை ஜெயமாய் மாறும் என்பதை நாம் ஒருநாளும் மறந்துபோகக் கூடாது: வெற்றி நமக்கு நிச்சயம்.

கர்த்தர் உங்கள் ஒவ்வொருவரோடும் கூட சதாகாலமும் தங்கி தரித்திருப்பாராக. நம்மேல் மாறா அன்பும் கிருபையுமுள்ள தேவனுக்கே என்றென்றும் மகிமை உண்டாவதாக. கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார் ஆமென்.

**கர்த்தர் கிருபையில்**
**சகோ. ஆரோக்கியதாஸ். P**

## கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதர சகோதரிகளுக்கு !

**தாங்கள் இந்திய தேச மிஷினரிகளை தாங்கும் ஊழியத்திற்கு பொருத்தனை செய்திருந்தால், தங்களது காணிக்கைகளை சகோ. தாஸ்கருணா அவர்களிடத்திலும்,**

**திக்கற்ற பிள்ளைகளின் ஊழியத்திற்கென்று பொருத்தனை செய்திருந்தால் தங்களது காணிக்கைகளை சகோ. ஜெய் சாம் டேனியல் அவர்களிடத்திலும்,**

**போக்குவரத்து ஊழியத்துக்கென்று கொடுக்கிறவர்கள் தங்கள் காணிக்கைகளை சகோ. கிரன் அவர்களிடத்திலும்,**

**ஆலயம் கட்டுமான ஊழியத்திற்கென்று கொடுக்கிறவர்கள் தங்கள் காணிக்கைகளை சகோ. சாம் ஆனந்த் அவர்களிடத்திலும் கொடுத்து, ஊழியத்தை தாங்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.**

# தேவ செய்தி

## ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்

## பரலோக ராஜ்யம் அவர்களுடையது - மத்தேயு 5 : 3

ஆவியில் எளிமையுள்ளவர்கள் முற்றிலுமாய் தேவனை சார்ந்து வாழ்வார்கள். **"உன் சுயபுத்தியின் மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள், அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்** **(நீதி 3:5-6)** ஆவியில் எளிமையுள்ளவர்கள் தங்களுடைய சுயபுத்தியின் மேல் சாயாதவர்கள்; முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையால் இருப்பார்கள். தங்களுடைய வழிகளில் எல்லாம் தேவனையே நினைத்துக் கொண்டு இருப்பார்கள் தங்களை ஞானி (மற்றவர்களை அற்பம்) என்று எண்ணாதவர்கள் கர்த்தருக்குப் பயந்து தீமையை விட்டு விலகுகிறவர்கள். **(நீதி 3:7)**

### தானியேலின் எளிமை:

உயர்ந்த பதவியில் இருந்தாலும், தானியேல் கர்த்தரைத் தேடுவதில் குறைந்து போகவில்லை. பதவியோ, புகழோ,செல்வமோ தேவனைத் தேடுவதற்கு தடைகளாக தானியேலின் வாழ்க்கை காணப்படவில்லை. இன்று அநேகர் பதவி, புகழ்; பணம் வந்துவிட்டால் தேவனை மறந்து விடுவார்கள். ஆனால் தானியேலோ, தன்னுடைய ஆவிக்குரிய எளிமையை (வறுமையை) வெளிப்படுத்தினான். தேவனையே முற்றிலுமாய் சார்ந்து வாழ்ந்தான். தானியேல் அழகானவன், சகல ஞானத்திலும் தேறினவன், யாதொரு மாசும் இல்லாதவன், அறிவில் சிறந்தவன், கல்வியில் நிபுணன், வாலிபன் மாத்திரமல்ல உயர்ந்த இடத்தில் வேலை செய்வதற்கான திறமையும் இருந்தது. ஆனாலும், இவைகள் அனைத் தும் இருந்தும் தானியேல் சுயத்தை சார்ந்து வாழாமல், சுயத்தை வெறுத்து (வெறுமையாக்கி) தேவனையே நாடினான். கல்தேயர் தானியேலின் அழகை அவனுடைய சரீரத்தில் பார்த்தார்கள், தேவனோ அழகை தானியேலின் இருதயத்தில் பார்த்தார்.**"தானியேலுக்கு தேவன் சகல எழுத்திலும் ஞானத்திலும் அறிவையும் சாமர்த்தியத்தையும் கொடுத்தார். தானியேலைச் சகல தரிசனங்களையும் சொப்பனங்களையும் அறியத்தக்க அறிவுள்ளவனாக்கினார்"**(தானி1:17) பதவி உயர்ந்தாலும்,தேவனைத்தேடுவதில் தானியேலின் ஆர்வம் தணிந்து போகவில்லை. தானியேல் தேவனுடைய வார்த்தைகளை நாடினான். எரேமியா தீர்க்கதரிசனத்தை வாசித்து, தேவ சித்தத்தை அறிந்து கொண்டான் **(தானி 9:2)**. உபவாசம் பண்ணி இரட்டிலும் சாம்பலிலும் உட்கார்ந்து தேவனாகிய ஆண்டவரை ஜெபத்தினாலும் விண்ணப்பங்களினாலும் தேடினான் **(தானியேல் 9:3)**. பாவ அறிக்கை செய்து, மன்னிப்பு கேட்டான்; சுய நீதியை சாராமல், தேவனுடைய இரக்கங்களை நம்பி கெஞ்சினான் **(தானி 9:20)** தானியேலின் எளிமை

பரலேகத்தை அசைத்தது. தேவன் காபிரியேல் தூதனை அனுப்பினார்; வேகமாய் பறந்து போ, என்று தூதனுக்குக் கட்டளையிட்டார். காபிரியேல் வேகமாய்ப் பறந்து வந்து, தானியேலைத் தொட்டான் (தானியேல் 9:21). தானியேலோடு பேசினான்; தீர்க்கத்தரிசனங்களை வெளிப்படுத்தினான். இதை வாசிக்கின்ற சகோதரனே, சகோதரியே, தேவனை சார்ந்து வாழ்கின் றாயா? காலையில் வெளியே செல்லும் முன், ஆடை அலங்காரத்திற்கு ஒரு மணி நேரம் செலவு செய்கிறாய் ஆனால் ஜெபிப்பதற்கு.... ஒரு நிமிடம் தானா? இன்று அநேக கிறிஸ்தவர்கள் இப்படித் தான் காணப்படுகிறார்கள். காலையில் வேத வாசிப்புக்கு, ஜெபத்திற்கு இடம் இல்லை; மற்ற காரியங்களுக்கு நேரம் இருக் கிறது. இது எதைகாட்டுகிறது தேவ சித்ததிதை நிராகரிக்கும் வாழ்க்கை சுய பலன் அறிவு,அழகு போதும், தேவன் வேண்டாம் என்னுடைய சுயத் தால் என் வேலைகளை நான் சாதித்து விடுவேன் இதுவா ஆவியில் எளிமை யுள்ள வாழ்க்கை? சகோதரனே, சகோதரியே மனம்திரும்பு! தேவனை சார்ந்து வாழ்ந்திடு, சுயத்தை வெறுத்திடு இனி நான் அல்ல கிறிஸ்துவே எனக்குள் ஜீவிக்கிறார் என்று சொல்லிடு. ஒவ்வொருநாளும் காலையில், வேதத்தை வாசித்து,ஜெபித்து, தேவனை ஆராதித்து புறப்படு. அப்பொழுது பரலோகம் திறந்திடும். தேவன் அந்தந்த நாளின் காரியங்களை வாய்க்க செய்வார்.

## ஆயக்காரனின் எளிமை:

லூக்கா 18: 9-14 வேதபகுதியில் இந்த ஆயக்காரனின் ஜெபத்தைக் குறித்துப் பார்க்கிறோம். பரிசேயன் நான்குவிதமான மனிதர்களோடு ஒப்பிட்டு தன்னை உயர்த்திக் கொள்கிறான் (பரிகாரர்,அநியாயக்காரர், விபசாரக்காரர்,ஆயக்காரன்) இது ஆவியின் மேட்டிமையைக் காட்டுகிறது. ஆயக்காரனோ நான்கு வார்த்தைகளை சொல்லி ஜெபித்தான் **தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்.** இது ஆயக்காரனின் ஆவியின் எளிமையைக் காட்டுகிறது. பரி சேயன் பெருமையடித்துப் பேசினான்; ஆயக்காரனோ மார்பில் அடித்துக் கொண்டு ஜெபித்தான். பரிசேயன் தன்னுடைய உபவாசம், தசமபாகம் தன் னை பரலோகத்திற்கு கொண்டு போகும் என்று நினைத்தான். ஆயக்காரனோ, தேவனுடைய கிருபை சிலுவையில் இயேசு சிந்தின இரத்தம் மாத்திரமே தன் னை நீதிமானாக்கும் என்று கெஞ்சினான். பரிசேயன் அல்ல; ஆயக்காரனே நீதிமானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பிப் போனான். பெருமையுள்ளர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார்; தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார். சகோதரனே, சகோதரியே நீ எதைத் தேடுகிறாய்? சுய பெருமையை நாடுகிறாயா? அல்லது தேவனுடைய கிருபையை சார்ந்து வாழ்கிறாயா? தேவனுடைய சமூகத்தில் உன்னைத் தாழ்த்து; இரட்டுடுத்தி உபவாசித்து ஜெபித்திடு. சுய பெருமைகளை சாம்பலாக்கிடு. தேவ கிருபை

யை பற்றிக்கொள். தேவனுக்குக் கொடுத்திடு எல்லாவற்றையும் நமக்கு அருளின தேவனுக்கு ஒரு சிறு பகுதியைக் கொடுப்பது நம் மேல் விழுந்த கடமை. இதைப் பெருமையாக எண்ணினால் அது நம்முடைய மடைமை. உபவாசம் என்பது வயிற்றிற்கு மாத்திரம் அல்ல; பாவங்களை வெறுமையாக்கிட வேண்டும். சுயத்தையும்,பெருமையையும் வெறுமையாக்க வேண்டும். தேவ கிருபையை அருமையாய் எண்ணி நாடுவோம். ஆவியில் எளிமை என்பது தேவனையே முற்றிலுமாய் சார்ந்திருப்பது. சிறு காரியங்களுக்கும் தேவனையே நோக்கி பார்க்கின்ற வாழ்க்கை வாழ்ந்திடுவோம். ராஜாவுக்கு பதில் சொல்லும் முன், நெகேமியா பரலோகத்தின் தேவனை நோக்கி ஜெபம்பண்ணினான் (நெகே 2:4) உன்னையே தாழ்த்தி (மார்பிலே அடித்துக் கொண்டு) சிலுவையில் அடிபட்ட இயேசுவை உயர்த்திடு. அதுவே உன்னைப் பரலோகம் கொண்டுசெல்ல வழிவகுத்திடும். தேவன் தாமே நம்மை ஆசிர்வதிப்பாராக!

கிறிஸ்துவின் பணியில்

சகோ. J . கிருஸ்டோபர் தேவராஜ்

## கன்மலை

தாயினும் மோலான உன் அன்பு
என்றென்றும் போதும் இந்தப் பேரன்பு
தகப்பனே உம்மைப் போல் எனைக் காக்க
தரணியில் யாருண்டு தயவாய் பாதுகாக்க
இரட்சிப்பின் வஸ்த்திரம் நான் உடுத்த
இரட்சகரின் வஸ்த்திரத்தில் உதிரம் கண்டேன்
பரிசுத்த வாழ்வை நான் காண
பாடுகள் பலவற்றை நீர் ஏற்றீர்
பாவை எந்தன் வாழ்க்கையிலே
பரிசுத்தர் துணையாய் வந்ததினால்
பாவம் என்னை அணுகாமல்
அனுதினம் என்னை காக்கின்றீர்
மலைபோல் துன்பம் வந்த போதும்
கன்மலைமேல் என்னை நிறுத்துகின்றீர்
கண்ணின் மணிபோல காத்ததினால்
விடியலைத் தினமும் காண்கின்றேன்
எந்தன் கன்மலை நீர்தானே – தினம்
காக்கும் தெய்வமும் நீர்தானே....... .Amen..

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரி

K.வனிதா

# வீட்டைக் கட்டுகிறாயா? அல்லது இடிக்கிறாயா?

**நீதி 14:1 புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள் புத்தியில்லாத ஸ்திரீயோ தன் கைகளினால் அதை இடித்துப் போடுகிறாள்.** சமுதாயத்தில் அநேகர் பெண் களை வீட்டு வேலைக்காரிகளாகப் பார்க்கிறார்கள் அல்லது சமையல் காரிகளாகப் பார்க்கிறார்கள். ஆனால் வேதாகமோ பெண்ணை ஒரு ஞானமுள்ள பரம்பரையை உருவாக்கும் விஞ்ஞானியாகப் பார்க்கிறது. இது எப்படி யாகும்? என்று மரியாள் கேட்டாள் **(லூக்கா 1:34)** தேவ தூதன் சொன்ன பதில் என்ன தெரியுமா? பரிசுத்த ஆவி உன் மேல் வரும் தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை.

**1)புத்தியுள்ள ஸ்திரீ பரிசுத்த ஆவி தங்கும் வாசஸ்தலம் :** புத்தியுள்ள ஸ்திரீ தன் இருதயத்தை பரிசுத்த ஆவியானவர் தங்குவதற்கு திறந்து இடம் கொடுக்கி றாள். தன்னுடைய பெலத்தை அல்ல பரிசுத்த தேவனின் பெலத்தை நாடுகிறாள். இதோ நான் ஆண்டவருக்கு அடிமை என்று மரியாள் தன்னை ஒப்புக்கொடுத்தது போல தன்னைத் தாழ்த்தி ஆண்டவரின் சித்தத்திற்கு தன்னை அர்ப்பணிக்கிறாள். பலத்தினாலும் அல்ல பராக்கிரமத்தினாலும் அல்ல என்னுடைய ஆவியினாலே-யே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் **(சகரி 4:6)** என்ற வாக்குத்தத்தத்தை சார்ந்து வாழ்கிறாள். அற்பமான மரியாள் மூலமாக ஒரு அற்புதம் உலகத்தில் உதயமானது. சாதாரண மரியாள் பரிசுத்த ஆவிதங்கும் வாசஸ்தலமாய் தன்னை அர்ப்பணித்தாள் சரித்தி ரம் போற்றும் சாதனையாளர்கள் பட்டியலில் இடம் பெற்றாள். பெண்ணே உலக மாயை ஆடை அழகு அலங்காரம் என்று உன் இருதயம் மதிமயங்கி நடக்கிறாயா? இதனால் ஞானமில்லாத, கர்த்தருக்குப் பயமில்லாத ஒரு சந்ததி உருவாக இடம் கொடாதே! நில்! கவனி! சிந்தி!!! பரிசுத்த ஆவியானவருக்கு உன் இருதயத்தை திறந்து கொடு. பார் போற்றும் புத்தியுள்ள சந்ததியை உருவாக்கிடு!

**2)புத்தியுள்ள ஸ்திரீ பொல்லாப்பை விட்டு விலகுகிறாள்** - இருளுக்கும் ஒளிக்கும் சம்பந்தமேது? பரிசுத்த ஆவியானவர் இருக்கும் இடத்தில் பொல்லாப்புக்கு இடமில்லை. பெண்ணே, உன்னிடத்தில் பரிசுத்த ஆவியானவர் வந்து வாசம் செய்ய வேண்டுமென்றால், உன்னில் காணப்படும் பொல்லாப்பை நீ அகற்ற வேண்டும், பரிசுத்தத்தை நாட வேண்டும். சிகை அலங்காரமல்ல, நகை அலங்காரமல்ல, உடை அலங்காரமல்ல, பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரை தொழுது கொள்ள வேண்டும். **"இதோ ஆண்டவருக்கு பயப்படுவதே ஞானம் பொல்லாப்பை விட்டு விலகுவதே புத்தி" (யோபு 28:28).** போத்திபாரின் மனைவி பொல்லாப்பை நாடினாள் யோசேப்போ பரிசுத்தத்தை நாடினான். போத்திபாரின் மனைவியால் வந்த சந்ததி என்னவாயிற்றென்று தெரியவில்லை; நிச்சயமாய் இச்சை நிறைந்த புத்தியற்ற ஒரு சந்ததியை உருவாக்கி இருப்பாள். யோசேப்பை தேவன் உயர்த்தினார். அவன் மூலமாய், இஸ்ரவேல் சந்ததியை உயர்த்தினார். புற ஜாதியான ரூத் பொல்லாப்பை விட்டு விலகினாள். இஸ்ரவேலை நாடினாள், பரிசுத்த வித்து அவள் சந்ததியில் உருவாக வழிவகுத்தாள். ராகாப் பொல்லாப்பை

விட்டு விலகினாள் வேசித்தனத்தை உதறினாள் பரிசுத்த சந்ததியில் இடம் பெற்றாள். பெண்ணே பொன்னையும், மண்ணையும், கண்ணையும் கண்டு மயங்காதே! விண்ணை துறந்து தன்னையே உனக்காய் அர்ப்பணித்த இயேசுவிடம் வா! பொல்லாப்பை விட்டு விலகிடு! உன்னில் வாசம் பண்ணும் தேவன் பொன்னிலும் அதிகமாய் உன்னை மின்னச் செய்திடுவார்! **"எழும்பி பிரகாசி உன் ஒளி வந்தது கர்த்தருடைய மகிமை உன் மேல் உதித்தது. இதோ இருள் பூமியையும் காரிருள் ஜனங்களையும் மூடும் ஆனாலும் உன் மேல் காணப்படும்...உதிக்கிற உன் ஒளியினிடத்துக்கு ராஜாக்களும் நடந்து வருவார்கள்.....உன் குமாரர் தூரத்திலிருந்து வந்து உன் குமாரத்திகள் உன் பக்கத்தில் வளர்க்கப்படுவார்கள்.... உன் இருதயம் அதிசயப்பட்டுப் பூரிக்கும்... சின்னவன் ஆயிரமும் சிறியவன் பலத்த ஜாதியுமாவான் கர்த்தராகிய நான் ஏற்றக் காலத்தில் இதைத் தீவிரமாய் நடப்பிப்பேன்"** (ஏசாயா 60)

**3) புத்தியுள்ள ஸ்திரீ ஒரு ஜெப வீடு** – அன்னாளின் ஜெபம் அவளுடைய உதடுகள் அசைந்தது. பரலோகத்தையே அசைத்தது. மகா பெரிய தீர்க்கதரிசி சாமுவேலை உலகிற்குத் தந்தது சூசன்னாவின் ஜெப வாழ்க்கை ஒரு வல்லமையுள்ள தேவ ஊழியன் ஜான் வெஸ்லியை உலகிற்கு தந்தது காரணம் சூசன்னாவின் இடை விடா ஜெபம். ஜெபம் என்றால் ஏதோ நாம் கேட்பதெல்லாம் தேவன் கொடுத்து விடுவார் என்பது அல்ல மாறாக அது தேவ சித்தத்தை நம் வாழ்வில் அறிந்து கொள்ள உதவுகிறது. சுய சித்தமே பாவத்திற்கும் துயரத்திற்கும் ஆணிவேர் (Self will is the root of all sin) என்பதை சூசன்னாள் அறிந்திருந்தாள் எனவே தன்னுடைய பிள்ளைகளுக்கு அடிக்கடி சுய அடக்கத்தை (Self control) குறித்து போதித்து வாந்தாள். ஜெபம் மலையையே அசைத்திடும் என்பார்கள். ஆமாம் நம் ஜெபம் மலைபோன்ற கல்லான இதயத்தை கரைத்திடும் வல்லமையுள்ளது. கல்வாரியில் பாடுகள் மத்தியில் இயேசுவின் ஜெபம் கல்லான கள்ளனைத் கரைய வைத்தது. இயேசுவின் இரத்தம் கறைபடிந்த கள்ளனின் கறையை அகற்றிக் கரைசேர வைத்தது புனிதக் கரை சேர்ந்தான் அந்த கள்ளன் பரதீசில் அடியெடுத்து வைத்தான் அன்றையத் தினமே. பெண்ணே கேடி (KD) கேடி என்று (பணம் பணம்) உன் இறுதயத்தைத் தேடி (கள்ளர்குகை)யாக்கி விடாதே! பரிசுத்த தேவன் தங்கும் ஜெபவீடாய் மாற்று. ஜெபிக்கும் ஒரு விசுவாசி தேவப் பிரசன்னத்தை உணர முடியும் (Presence of GOD) தேவ வல்லமையை தன் வாழ்வில் காண முடியும் (Power of GOD) தேவ சமாதானத்தினால் நிறைந்து (Peace of GOD)களி கூற முடியும். தேவ பாதுகாப்பை தன் வாழ்நாள் முழுதும் ருசித்திட முடியும் (Protection of GOD). சகோதரியே பரிசுத்தத்துக்கு இடம் கொடு பொல்லாப்பை விரட்டிடு;ஜெபவீடாய் மாறிடு; நீயே ஒரு நடமாடும் ஆலயம் (Mobile church) தேவன் உன்னை அலங்கரிப்பார் அலங்காரமான சந்ததி உன்னிலிருந்து உதயமாகும்! அல்லேலூயா!!

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரி
**ஸ்நேகலதா கிருஸ்டோபர்**

**உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம். தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான். 1யோவான் 2 :17**

நாம் காண்கிற இந்த உலகம் நிலையானது அல்ல இதிலே வாழ்கிற நாமும் நிலையானவர்கள் அல்ல. இந்த உலகம் முழுவதும் அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டிருக்கிறது (2பேதுரு3:7) இந்த வாழ்க்கையும் **சங்கீதம் 90:6,10** வசனங்களில் வாசிக்கிறது போல சீக்கிரமாய் கடந்து போகும். எதுவும் நிரந்தரம் இல்லாத இந்த வாழ்க்கையில் ஒன்று நிரந்திரம். என்னவென்றால் தேவனுடைய சித்தத்தை செய்கிறவன் என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்.

நித்திய ஜீவன் அளிப்பேன் என்பதே தேவன் நமக்கு கொடுத்த வாக்குத்தத்தம். இந்த உலகத்தால் கறைபடாதபடிக்கு நம்மை தேவனுடைய சித்தத்தை செய்ய அர்பணித்து வாழ வேண்டும். ஏனென்றால் **2யோவான் 2:16ல்** சொல்கிறது போல மாம்ச இச்சை; கண்களின் இச்சை; ஜீவனத்தின் பெருமை இவையெல்லாம் பிதாவினால் உண்டானவைகள் அல்ல; உலகத் தினாலுண்டானவைகள்.அதினால் தான் **2யோவான் 2:15 ல்** உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிடத்திலும் அன்பு கூறாதிருங்கள் என்று சொல்லப் பட்டிருக்கிறது. அதுமாத்திரமல்ல ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பு இல்லை. உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகை. ஆகவே நாம் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். தேவனுக்கு பிரியமில்லாத காரியங்களைச் செய்ய துணிகரம் கூடாது. தாவீது **சங்கீதம் 143 :10** ஒரு ஜெபத்தை ஏறெடுக்கிறார். உமக்கு பிரியமானதை செய்ய எனக்கு போதித்தருளும்; நீரே என் தேவன் உம்முடைய நல்ல ஆவி என்னை செம்மையான வழியிலே நடத்துவாராக.

தேவனுக்கு பிரியம் எது – அவருடைய சித்தத்தை அனுதினமும் நம்முடைய வாழ்க்கையில் செய்வது. இந்த உலக வாழ்க்கையில் தேவனுடைய சித்தத்தை செய்வது கடினமான ஒன்றுதான். அதற்காக தான் தாவீது அப்படி ஜெபித்தார். உம்முடைய நல்ல ஆவி செம்மையான பாதையிலே நடத்துவாராக என்று பரிசுத்த ஆவியானவர் **யோவான்16:8 ல்** நம்மிடத்தில் வந்து பாவத்தை குறித்தும் நீதியைக் குறித்தும் நியாயத் தீர்ப்பை குறித்தும் உலகத்தை குறித்தும் கண்டித்து உணர்த்துவார். தேவ ஆவியானவர் எது சரி எது தவறு என்று உணர்த்துகிறாரோ அதற்கு நாம் கீழ்ப்படிய வேண்டும்.

**ரோமர் 12:2ல்** நாம் இந்த பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம் தரியாமல் தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிசுத்தமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள். இந்த உலகத்தின் இச்சைகளோடே ஒன்றிசைந்து வாழாமல் நம்மை குறித்ததான தேவனுடைய சித்தம் என்ன என்று அறிந்து செயல்பட்டு வாழ வேண்டும்.

தொடர்ச்சி 12-ம் பக்கம்

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

" உன் பேரை பெருமைப்படுத்துவேன் நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்
( ஆதி–12:2 ) "

செல்வன். ஜெபராஜ் ஜோசப்
சகோதரி. மெர்ஷலின் தயா யேசுரத்தினம்
சகோ . பிராங்க்ளின் கலைசெல்வன்
சகோதரி. போத்தியம்மாள் கண்ணன்
செல்வி. ரோஷ்ணி சர்மன்ராஜ்
செல்வன். எரிக் நாதன் மார்க் ஆன்டனி
செல்வி. வனிஷா வர்க்கீஸ்
சகோ. கிறிஸ்டோபர் தேவராஜ்
சகோ. வில்சன் செல்லையன்
செல்வி. எவெலினா மார்லீ ஜோஸ்
சகோதரி. எமிமால் சாமுவேல்
சகோ. ஆரோக்கியதாஸ்
சகோதரி. ஸ்நேகலதா கிறிஸ்டோபர்
சகோ. ராஜகுமார்
செல்வி. புஷ்பா ராஜன்
செல்வன். சாமுவேல் சீனிவாசன்

சகோ. சதீஷ் குமார்
செல்வி. ஜெனிஷா வர்க்கீஸ்
சகோ. வேளாங்கண்ணி
சகோ. அருண் இம்மானுவேல்
செல்வன். ஆரோன் விஜயன்
சகோ. கோபு
செல்வி சிபென்ஷிகா சாம் ஆனந்த்
சகோதரி. சௌமியா ஸ்டாலின் சுனில்
சகோதரி. ஆஸ்லின் ரோனியா சுபின்
சகோதரி. டெய்ஸி ஸ்ரீனா மார்க் ஆண்டனி
சகோதரி. சங்கீதா
செல்வி. லாரா கசாண்ட்ரா சதீஷ்




## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்



திரு / திருமதி . எபினேசர் & சினேகா
திரு / திருமதி . ஸ்டீபன் ஜெயகுமார் & எப்சிபா
திரு / திருமதி . இம்மானுவேல் ஸ்டீபன் & சாந்தி
திரு / திருமதி . பால்ராஜ் அமோஸ் & பிரிசில்லா
திரு / திருமதி . சிவகுமார் & கிளாடிஸ் பாப்பி
திரு / திருமதி . வர்க்கீஸ் & ஜெஸ்லெட்
திரு / திருமதி . ஜாண்போஸ்கோ & அமர்லோர்பவ மேரி



'ஆகையால் நீங்கள் புசித்தாலும் குடித்தாலும் எதைச் செய்தாலும் எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக் கென்று செய்யுங்கள் ' – 1கொரிந்தியர் 10 – 31

பிறந்த நாள் மற்றும் திருமண நாளை கொண்டாடுகிற அனைவருக்கும் சபையின் செயற்குழு சார்பாக இனிய பிறந்த நாள் மற்றும் திருமண நாள் வாழ்த்துக்கள்

# ஆகஸ்ட் மாத நிகழ்ச்சி நிரல்

## வெள்ளி ஆராதனை மாலை 4:00 முதல் 6:00 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 01/08/2025 | சகோ. சுபின் சிங் | சகோ. பிராங்ளின் |
| 08/08/2025 | சகோ. ராமர் | சகோ. ஜெகன் |
| 15/08/2025 | சகோ. பிரசாத் | சகோ . ஸ்டாலின் |
| 22/08/2025 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 29/08/2025 | சகோ . ஆரோக்கிய ராஜ் | சகோ. சீனிவாசன் |

## ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:30 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 03/08/2025 | சகோதரி. ஜீனா சதீஷ் | சகோதரி. அனிதா திவ்யராஜ் |
| 10/08/2025 | சகோ. பக்தராஜ் | சகோ. தாமஸ் |
| 17/08/2025 | சகோதரி. செலின் டேவிட் | சகோதரி. டெய்சி எபினேசர் |
| 24/08/2025 | சகோ. குணா | சகோ . ரவி ஜாண் பீட்டர் |
| 31/08/2025 | சகோ. V. எபினேசர் | சகோ.சாம் ஆனந்த் |

**14/08/2025 வியாழன் அன்று முழு இரவு ஜெபம்**
இடம் – பாஹாகீல் ஜெப வீடு – நேரம்– இரவு 10:00 முதல் அதிகாலை 1:00 மணிவரை

**23/08/2025 சனிக்கிழமை – அன்று சகோதரிகள் ஐக்கிய கூடுகை**
இடம் – பாஹாகீல் ஜெப வீடு – நேரம் – மாலை 6:30 – 8:30 வரை
வேத வினா பகுதி – எபேசியர்

**29/08/2025 வெள்ளி அன்று வாலிபர் ஐக்கிய கூடுகை**
இடம் – பாஹாகீல் ஜெப வீடு – நேரம் – மாலை 6:30 – 8:15 வரை

**செவ்வாய் கிழமை**
குடும்ப ஆசீர்வாத ஜெபக்கூடுகை
இடம் – பாஹாகீல் ஜெப வீடு
நேரம் – மாலை 6:30 முதல் 8:00 வரை

**வியாழக்கிழமை**
பாடல் பயிற்சி
இடம் – பாஹாகீல் ஜெப வீடு

**சனிக்கிழமை**
சிறுவர் வேதாகமப் பள்ளி
இடம் – பாஹாகீல் ஜெப வீடு
நேரம் – மாலை 3:30 முதல் 5:00 வரை

**திங்கட்கிழமை**
பெண்கள் ஐக்கிய ஜெபம்
இடம் – பாஹாகீல் ஜெப வீடு

9-ம் பக்கம் தொடர்ச்சி

நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எப்போதும் தேவனுடைய சித்தத்தையே செய்தார். அதற்காவே இந்த உலகத்திற்கு அவர் மாம்சத்திலே வெளிப்பட்டார். **(யோவான் 6:38)** பிதாவின் சித்தம் செய்வதே என் போஜனம் என்றார் **(யோவான் 4:34)** இயேசு கிறிஸ்து மரண பரியந்தம் பிதாவின் சித்தம் செய்தார் என்று பார்க்கிறோம். சிலுவை பாடுகளுக்கு முன்பாக இப்படி ஜெபித்தார். **மத்தேயு 26 : 39,42, 44** அவர் பிதாவின் சித்தத்தை செய்ய அற்பணித்த போது தேவ தூதர்கள் வந்து அவரை பலப்படுத்தினார்கள்.

அப்போஸ்தலராகிய பவுலை தேவன் வல்லமையாய் எடுத்து பயன் படுத்தினார். காரணம் நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர் என்று **(அப்போஸ்தலர் 9:6)** ல் தேவனை நோக்கிக் கேட்டு தன் ஊழியத்தை ஆரம்பித்தார். ஆகவே எல்லா சூழ்நிலையிலும் தேவ சித்தத்தை நாம் செய்யும் போது நிச்சயமாய் நம் வாழ்க்கையை தேவனுக்கும் நமக்கும் அநேகருக்கும் பிரயோஜனமாய் மாற்றுவார் என்பதே நிச்சயம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பரிசுத்த நாமத்திற்கு மகிமை உண்டாவதாக. ஆமென்.

**கிறிஸ்துவின் பணியில்**
**ATC Youth Team**
**Be an example : 1 Timothy 4 : 12**

## உண்மையான உறவுகள்! உதவி செய்யும் உறவுகள்!
## ஊக்கப்படுத்தும் உறவுகள்!

இன்று புதிய உறவுகளுக்கு இருக்கும் மரியாதை பழைய உறவுகளுக்கு இருப்பதில்லை. பழைய உறவுகள் சிறகுகள் போல உதிர்ந்து கொண்டே இருக்கின்றன. உண்மையில் பழைய உறவுகள் தான் நமது ஆணிவேர்கள். யாரும் மறைவாக இருக்கும் வேர்களை நேசிப்பதில்லை. புதிதாய் மிளிரும் தளிர்களையே அதிகம் விரும்புகிறோம். தாய், தந்தை, சகோதரன், சகோதரி, மாமா, மைத்துனன், தாத்தா, பாட்டி, சித்தப்பா, சித்தி இப்படி தவிர்க்க முடியாத உறவுகளில் கூட இன்று விரிசல் விழுந்து கொண்டே இருக்கிறது. முன்பெல்லாம் உறவுகள் பாசத்தாலும் உணர்வாலும் பின்னப்பட்டிருந்தது. இப்போது அவை பணத்தால் பதவியால் தான் என்கின்ற அகங்காரத்தால் அறுபட்டுக் கிடக்கிறது. குளக்கரையில் குழாயடியில் பேசிய எல்லாவற்றையும் இப்போது கைப்பேசியே பார்த்துக் கொள்கிறது. நாளுக்கு நாள் உறவுகளின் அடர்த்தியும் அன்பும் குறைந்து கொண்டே வருகிறது. ஒரு ஊரில் தந்தை ஒருவர் ஒரு பெரிய ஆட்டை வெட்டி கறி சமைத்து விட்டு தன் மகளிடம் மகளே நம்முடன் சாப்பிட என் நண்பர்களையும் அன்டை வீட்டாரையும் அழைக்கலாம் எல்லோரும் சாப்பிடுவோம் என்றார். அவருடைய மகளும் சரியென்று தெருவுக்கு வந்து கத்த ஆரம்பித்தாள். தயவு செய்து எங்கள் வீட்டில் எரியும் தீயை அணைக்க உதவுங்கள் என்று உரக்க கூச்சலிட்டாள். அதை கேட்ட ஒரு சில நிமிடங்களில் மக்கள் சிலர் வெளியே

ஓடி வந்தனர். மீதமுள்ள மக்கள் கூக்குரல் கேட்காதது போல இருந்தனர். வந்தவர்களுக்கு நன்றியைக் கூறி கறி விருந்து பரிமாறப்பட்டது அனைவரும் நன்றாக சாப்பிட்டனர். அவர்கள் சென்ற பிறகு தன் மகளை பார்த்து கேட்டார் வந்தவர்களை எனக்கு தெரியாது இதுவரை பார்த்ததில்லை என்னுடைய நண்பர்கள் உறவினர்கள் எங்கே? மகள் சொன்னாள் தங்கள் வீடுகளில் இருந்து வெளியே வந்தவர்கள் நம் வீட்டில் எரிவதாக நினைத்த தீயை அணைப்பதற்கே அன்றி விருந்துண்ண அல்ல. இவர்களே நம்முடைய தாராள மனப்பான்மைக்கும் விருந்தோம்பலுக்கும் தகுதியானவர்களாக இருக்க முடியும் என்றாள் பணம் இருக்கும் போது நம் பக்கத்தில் இருக்கும் உறவுகளை விட நாம் பதறி துடிக்கும் போது நம் பக்கத்தில் இருப்பவர்களே உண்மையான உறவுகள். எவ்வித பிரதி பலனும் பாராமல் நம் துயரத்தில் உதவுபவர்கள் உண்மையான உறவுகள். உறவுவட்டம் பெரிதாக இருக்கும் குடும்பங்களில் மகிழ்ச்சியும் மனநிறைவும் தானாகவே வந்து குடியேறுகிறது. மாறாக உறவை ஒதுக்கும் குடும்பங்களில் மன உளைச்சலும் பதற்றமுமே காணப்படுகின்றன. எனவே நாம் அனைவரும் கிறிஸ்துவின் அன்பு உடையவர்களாய் உறவுகளை பேணுவோம் மகிழ்ச்சியும் மன நிறைவும் பெறுவோம். **இப்பொழுது விசுவாசம் நம்பிக்கை அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது இவைகளில் அன்பே பெரியது.**

அன்புடன்
**சகோதரன். P.குணா**

## காண்கின்ற தேவன்

உம் கண்கள் பூமியெங்கும்
உலாவுகின்றதே!
பாவத்தை வெறுக்கும்
சாந்தக்கண்ணனவர்
ஆனால் பாவியை நேசிக்கும் தயவுள்ளவர்
அவனவன் செய்கைகளுக்குத் தக்க
பலனைத்
தருபவரும் இயேசுப்பா மாத்திரமே!
மன்னிப்பு உண்டு மட்டுமல்ல
தண்டனையும் கூடவே
சேர்த்து தருகின்ற நாளென்றும நிச்சயம்
வரும்
தாமதமின்றி வெகுசீக்கிரத்தில் நீதியுள்ள
நியாயாதிபதியாய் நம் முன்னே
தோன்றுவாரே!
மரித்தவர்களும் உயிரோடு எழுவார்கள்
அவரைக் குத்தின கண்கள் யாவும்
முகமுகமாய்

நாம் காணும் நாட்கள் நம் அருகாமையில்
இயேசுவே நீதிபதியாய் நம்மைக்
காண்கின்ற
தேவனாய் மேகத்தின் மீதினில் தூதர்
கூட்டங்களோடு
திரள் சேனையாய் வருவார் அவர்
வருகைக்கு
நாமும் ஆயத்தமாவோம்! விழித்திருந்து
ஜெபித்து
நம் வாழ்வில் ஜெயம் எடுப்போம்! சுத்த
இருதயத்தோடு நாமும் தேவனைத்
தரிசிப்போம்!
நித்தமும் அவரின் ஆசீர்வாதத்தைப்
பெறுவோமாக!

**கிறிஸ்துவுக்குள்**
**அன்பு சகோதரி**
**ஆ.பியூலா மெர்ஸிபால்**

# ஆகஸ்ட் மாதத்திற்கான வேத வினா!

**கீழ்க் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை 1 &2 கொரிந்தியர் புஸ்தகத்திலுள்ள வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்**



1. தீர்க்கதரிசனம் சொல்லுகிறவனாலே சபைக்கு என்ன உண்டாகும்?
2. மரணம் யாரால் உண்டானது?
3. எவன் சபிக்கப்பட்டவனாயிருக்ககடவன் என்று பவுல் கூறுகிறார்?
4. பரிகரிக்கப்படும் கடைசி சத்துரு எது?
5. என்னைப் போல அவனும் கர்த்தருடைய கிரியை நடப்பிக்கிறான் என்று யார் யாரை குறித்து சொல்லுகிறார்?
6. எது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது என்று பவுல் கூறுகிறார்?
7. பந்தயத்திற்கு போராடுகிற யாவரும் எப்படிப்பட்டவர்களாயிருப்பார்கள்?
8. யார் யூதருக்கு இடறலாயும் கிரேக்கருக்கு பைத்தியமாயும் இருக்கிறார்?
9. ஜென்மசுபாவமான மனுஷன் எவைகளை ஏற்றுக்கொள்ளான்?
10. யாருடைய சிந்தனைகள் வீணாயிருக்கிறது?
11. தேவனுடைய ராஜ்யம் எதிலே அல்ல எதினால் உண்டாயிருக்கிறது?
12. யாருடைய தந்திரங்கள் நமக்கு தெரியாதவைகள் அல்ல என்று பவுல் கூறுகிறார்?
13. எது கொல்லுகிறது எது உயிர்ப்பிக்கிறது?
14. சுவிசேஷம் யாருக்கு மறை பொருளாயிருக்கும்?
15. எங்களுடைய போராயுதங்கள் எப்படிப்பட்டவைகளாய் இராமல் எப்படி இருக்கிறது என்று பவுல் கூறுகிறார்?

குறிப்பு:- விடைகளை வருகின்ற 20-08-2025 க்குள் சபையின் செயலாளரிடமோ (66159784) அல்லது செய்திமலர் பொறுப்பாளரிடமோ (+917305651625) கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். விடைகளை 1&2 கொரிந்தியர் புஸ்தகத்தில் தேடி கண்டுபிடிக்கவும் . வேத வினா பகுதியை தாங்கி நடத்துவோர் சகோதரர் **சைமன் ஜெயக்குமார் குடும்பத்தினர்..**

## ஜுலை மாத வேத வினாவுக்கு பதில் எழுதிய உங்கள் அனைவருக்கும் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துகள்

Sis . வனிதா

Sis.சுகந்தி

Sis.பியூலா ஜெகநாதன்

Sis. ஜெஸ்லட்

Sis. பிரிஸ்கிலா செங்குட்டுவன்

Sis. நகோமி ஜான்சன்

Sis. தயா யேசுரத்தினம்

Sis. சாந்தி சீனிவாசன

Sis. ஜோன்சி ராணி

Sis. நித்யா ஜோன்ஸ்

Sis. பதிமினி வர்கீஸ்

Sis. ஜீனா சதீஸ்குமார்

Sis. ஜெபா விபின்

Sis. நிஜா

Bro.எட்வின் சாம் ஞானதுரை

Bro.எபினேசர்

Sis. மரிய குளோரி தாஸ்

Bro.பால்ராஜ் சேகரன்

**(ஜுன் மாத விடுபட்ட நபர்கள்)**

Bro.பால்ராஜ் சேகரன்

Sis. தயா யேசுரத்தினம்

## ஜீலை மாத வேத வினாவுக்கு விடை
## லூக்கா அதிகாரம்

1) இயேசு . ஞானத்திலும் வளர்த்தியில் தேவ கிருபையில் மனுஷர் தயவில் (லூக்கா 2:52)
2) பிசாசுகள் ( லூக்கா 4 :41)
3) ஆரோன் (லூக்கா 1:5)
4) மகா தீர்க்கதரிசியானவர் (லூக்7:16)
5) சீமோன் பேதுரு இயேசுவிடம் (லூக்கா 5 :8)
6) புகழ்ச்சியாய் ஐயோ ( லூக்கா 6:26)
7) கப்பர் நகூம் (லூக்கா 10:15)
8) விதை (லூக்கா 8 :11)
9) உப்பு (லூக்கா 14 :34)
10) சீலோவாமிலே (லூக்கா 13:4)
11) தேவனுடைய ராஜ்ஜியத்தில் (லூக்18-25) அல்லது (லூக் 18 :24)
12) ஆவியானவருடைய (லூக் 4:14)
13) இடறல்கள் (லூக்கா 17 -1)
14) பரிபூரணத்திலிருந்தெடுத்து காணிக்கை (லூக்கா 21 :4)
15) பிலாத்தும் ஏரோதும் ( லூக் 23:12)

## கற்புள்ள கன்னிகை

**2கொரிந்தியர் 11:2 —** நான் உங்களை கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக் கொடுக்க நியமித்தபடியால் உங்களுக்காக தேவ வைராக்கியமான வைராக்கியம் கொண்டிருக்கிறேன்.

கர்த்தருக்குள் பிரியமானவர்களே தேவனாகிய கர்த்தரை தெய்வமாக கொண்டிருக்கிற ஒவ்வொருவருக்குள்ளும் இருக்க வேண்டிய வைராக்கியமானது நாம் பரிசுத்தமாக கற்புள்ள கன்னிகையாக கிறிஸ்துவுக்குள் ஒப்புக் கொடுக்க வேண்டும் என்பதே. சபையானது மகிமையில் எடுத்துக் கொள்ளுமட்டும் பரிசுத்தத்தை காத்துக் கொள்ள வேண்டியது அவசியமாயிருக்கிறது.

ஆகிலும் சபையை குறித்து பவுல் பயப்படுகிறதாவது **2கொரிந்தியர் 11:3** ஆகிலும் சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்தது போல உங்கள் மனதும் கிறிஸ்துவைப் பற்றிய உண்மையினின்று விலகும்படி கெடுக்கப்படுமோவென்று பயந்திருக்கிறேன்.

கொரிந்து பட்டணத்திலுள்ள சிலர் கள்ளப் போதகர்களால் ஏமாற்றப்படுவதும் மாறுபாடான சுவிஷேசத்தை ஏற்று கொள்பவர்களாக இருந்தனர். **2கொரிந்தியர் 11:4** இப்படியாக சொல்கிறது **“உங்களிடத்தில் வருகிறவன் நாங்கள் பிரசங்கியாத வேறொரு இயேசுவை பிரசங்கித்தானானால் அல்லது நீங்கள் பெற்றிராத வேறொரு ஆவியையும் நீங்கள் ஏற்றுக் கொள்ளாத வேறொரு சுவிஷேசத்தையும் பெற்றீர்களானால் நன்றாய் சகித்திருப்பீர்களே.”**

கபட முள்ள வேலையாட்களின் போதகங்களை ஏற்றுக் கொண்டதால் அவர்கள் கிறிஸ்துவிடம் முழுமனதான பக்தியோடிருப்பதிலிருந்து விலகிக் கொண்டிருந்தார்கள். இன்றும் சபைகளில் நீதியின் ஊழியக்காரர் போல் தோற்றமளித்து தேவனுடைய வசனத்து மாறாக போதகம் பண்ணி தங்களை பின்பற்றுகிறவர்களை ஆவிக்குரிய அழிவுக்கு வழிநடத்துகிறவர்கள் உள்ளனர்.

மாறுபாடாக போதகம் பண்ணுகிறவர்களை பார்த்து இயேசு கூறுகிறார் **மத்தேயு 23:13** **மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே உங்களுக்கு ஐயோ! உங்களுக்கு ஐயோ! மனுஷர் பிரவேசியாதபடி பரலோக ராஜ்யத்தைப் பூட்டிப் போடுகிறீர்கள் நீங்கள் அதில் பிரவேசிக்கிறதுமில்லை பிரவேசிக்கப் போகிறவர்களை பிரவேசிக்க விடுகிறதுமில்லை.**

இப்படிப்பட்டவர்கள் கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலர் போலவும் நீதியின் ஊழியக்காரர் போலவும் வேஷம் தரித்து கொள்கிறார்கள். அவர்கள் உண்மையாகவே கரிசனையுடனும் அன்புடனும் இருந்து பாவ மன்னிப்பு சமாதானம் நிறைவு அன்பு மேலும் அநேக பயனுள்ள காரியங்களை போதிப்பார்கள். ஆனால் அவர்கள் சாத்தானின் கட்டுக்குள் வாழ்கிறார்கள்.

அவர்களுடைய சுவிஷேசம் மனிதரின் அறிவினால் உண்டாயிருக்கிறதே ஒழிய தேவனுடைய வெளிப்பாட்டினால் அல்ல.

இப்படிப்பட்டவர்களுடைய கள்ள போதகத்தை கேட்டு ஏமாந்து விடாமல் நிதானித்து தேவனுடைய வார்த்தையை அறிந்து கொள்ள வேண்டும் **கலாத்தியர் 1:6 ல்** **உங்களை கிறிஸ்துவின் கிருபையினாலே அழைத்தவரை நீங்கள் இவ்வளவு சிக்கிரமாய் விட்டு வேறொரு சுவிஷேசத்திற்கு திரும்புகிறதைப் பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன்.**

ஆண்டவராகிய இயேசு தன்னுடைய இரத்தத்தை விலைக்கிரயமாகக் கொடுத்து நம்மை அழைத்திருக்கிறார். அழைத்தவர் உண்மையுள்ளவராய் இருக்கிறார். எப்படிப்பட்ட உபத்திரவங்கள் நம் வாழ்க்கையில் வந்தாலும் தேவனுடைய வல்லமையுள்ள வார்த்தையைக் கொண்டு அன்போடும் உண்மையுள்ள இருதயத்தோடும் தேவனுக்கென்று ஊழியம் செய்து அவருடைய பரிசுத்தத்தை காத்துக் கொள்ள வேண்டும். சாத்தானானவன் ஒருவர் இருதயத்தையும் வஞ்சித்திட இடம் கொடாதபடிக்கு தேவ வசனத்தினால் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

**ஓசியா 2:19 –** **நித்திய விவாகத்துக்கென்று உன்னை எனக்கு நியமித்து கொள்ளுவேன் நீதியும் நியாயமும் கிருபையும் உருக்க இரக்கமுமாய் உன்னை எனக்கு நியமித்துக்கொள்ளுவேன்** என்று வாக்களித்திருக்கிறார். அவர் வருமளவும் சபையானது எல்லாவிதக் காவலோடும் தன்னைப் பாதுகாத்து கொண்டு கற்புள்ள கன்னிகையாக தேவனுக்கு ஒப்புக் கொடுக்க வேண்டுமென்ற வைராக்கியத்தோடு ஊழியம் செய்வோம்.

கர்த்தர் தாமே இந்த வார்த்தைகளை ஆசிர்வதிப்பாராக – ஆமென்

**கர்த்தரின் ஊழியப் பணியில் .. .. .. .. ..**

# August Month Quiz for Children

(Write the answers using the King James Version)



1) What did the people try to built in the land of shinar?
2) why did GOD confuse their language?
3) Why did Abraham and Lot separated?
4) Who did Abraham rescue from captivity?
5) What did GOD show Abraham to confirm HIS promise?
6) What sign did GOD give for HIS covenant with Abraham?
7) What did the visitors promise sarah?
8) Who was saved from sodam?
9) What happened to Lot's wife when she looked back?
10) What did Abraham say about Sarah in gerar?
11) What did GOD ask Abraham to do with Isaac?
12) Did Abraham sacrifice Isaac?
13) Where was Sarah buried?
14) Who was chosen to be Isaac's wife?
15) Who were the twin son's of Isaac and Rebekah?



Note:-**All children** should read the bible carefully and find the answers. Find the answers in the book of **Genesis chapter : 11 -25**. Submit your answers to the children bible school co-ordinator on or before **20/8/2025.** Please mention the reference along with the answers.

## ***HELPING LITTLE HEARTS FIND JESUS***

As someone who loves JESUS and wants to go to heaven one day, I often think about the younger childrens around me – my little cousins , neighbors or even kids at church. I wonder 'Do we know who JESUS really is' Because we don't want to reach heaven one day and realize that we are lost along the way.

JESUS said; in matthew 19 : 14 Let the little children come to me and do not hinder them, for the kingdom of heaven belongs to such as these. – Every child is a precious gift from GOD, and their hearts are open and ready to receive love, truth, and Joy. That is why it is so important to help little children know about JESUS while they are still young. We as a youngsters should help others especially children to walk in his light. Children often look up to older ones like us. When they see us praying. Reading the bible & showing kindness they begin to understand that JESUS is real and full of love. There are some ways to help little hearts find JESUS:

**Pray with them** – Even a small prayer before eating food or before sleeping helps children know that they can talk to GOD anytime.

**Tell bible stories** – Stories like Noah's ark, david & goliath or JESUS calming the storm capture their imagination & teach them about GOD's power & love.

**Sing with them** – Songs like 'JESUS loves me' or 'This little light of mine' help children remember GOD's truth with joy.

**Be an example** – when we forgive , share & love like JESUS they learn how to live like HIM too.

We are not too young to be leaders for CHRIST. As we grow in our faith we can gently guide our younger brothers , sister and friends to know JESUS so that one day we will all be together in heaven, holding hands & praising GOD forever. Let's be the light that shines for little heart.

- **Vincy**

Kids Corner




Joshua Johnson

## Answer for the Children Quiz - July

1.God – (Gen 1:1)

2. Everything that he had made (Gen 1 :31 )

3. Edan – (Gen 2: 8)

4.The Dust of the ground ( Gen 2:7)

5.The Tree of the knowledge of good and evil – (Gen 2:17)

6.God – ( Gen 3: 9)

7.Enoch – (Gen 5:24)

8. Violence – (Gen 6:11)

9.An Ank – (Gen 6:14)

10. Rainbow – (Gen 9:13)

## July Month Bible Quiz Answered Children

1. Fyona
2. Joshua Johnson
3. Amish
4. Vincy
5. Abel Raj
6. J. Jarral
7. Hanshika Sam
8. Ashlyn Keziah
9. Adriel Kemuel Dhas
10. Andrea Magdalene Dhas
11. Solomon
12. Jayden Paul
13. Hanish
14. Sifenshika
15. Vimal
16. Ryan Satheesh

# கடந்த மாத நிகழ்வுள் சில















# ஊழியம் செய்ய ஜெபியுங்கள்

## செயற்குழு உறுப்பினர்கள்

### முதன்மை ஊழியர்

Bro. ஆரோக்கியதாஸ்
Ph. 9987 0126

### செயலாளர்

Bro. ஆரோக்கியராஜ்
Ph.60918793

### பொருளாளர்

Bro. ஜான்சன்
Ph.97610275

### பெண்கள் ஐக்கிய தலைவி

Sis. டெய்சி எபிநேசர்
Ph.60686612

### வாலிப ஐக்கிய தலைவர்

Bro. M. கிறிஸ்டோபர்
Ph.67096449

Church e-mail ID- ahmaditamil.kw@hotmail.com
Church Website Address - ahmaditamilchurch.com

Church Postal Address
Your Name
PO.Box No: 46795,
Fahaheel, 64018,
Kuwait.

தங்களது
ஜெப விண்ணப்பங்கள்
எதுவாக இருந்தாலும்
எங்களுக்கு தெரிவிக்கவும்
உங்களுக்காக ஜெபிக்க
ஒரு குழு ஆயத்தமாய்
இருக்கிறது.

Private Circulation Only